**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 100/2016 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 |
| Name : | திருமதி. தாமரைச்செல்வி |
| Father's Name/Husband Name: | திரு. துரைசாமி |
| Village : | வெண்கலம் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 52/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 20.11.2025

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1, 4 ஆஜர் இல்லை கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி 2 மற்றும் 3 இறந்தார்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் மாடு வளர்த்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 ஜெயசீலி எனது பக்கத்து வீட்டுக்காரர். எதிரிகள் சத்யா, செல்வம், பாலம்மாள் ஆகியோரைத் தெரியும். அ.சா.1க்கும் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை என்று தெரியாது. சம்பவ சமயத்தில் நான் இல்லை. போலிசார் என்னை விசாரித்தனர். போலிசார் விசாரணையின்போது தற்போது கூறிய விவரத்தை தான் கூறினேன்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் எங்கள் வீட்டிற்கு அருகே குடியிருக்கின்றனர். போலிசார் என்னை விசாரித்தனர் என்றும், கடந்த 19.04.2011 அன்று இரவு 10.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது அ.சா.1ம் எதிரி சத்யாவும் சத்தம் போட்டுக் கொண்டிருந்தனர்

என்றும் எதிரி சத்யா அ.சா.1யை தகாத வார்த்தைகளால் பேசினார் என்றும் எதிரி செல்வம் அ.சா.1யை தகாத வார்த்தைகளால் பேசி ஈட்டி குத்துக்கோளால் அ.சா.1ன் தொண்டைக்குழியில் குத்தினார் என்றும், எதிரி சத்யா அ.சா.1யை தகாத வார்த்தைகளால் பேசி கல்லால் குத்தினார் என்றும் எதிரி தீபக் அ.சா.1யை தகாத வார்த்தைகளால் பேசினார் என்றும் எதிரிகள் அனைவரும் கொலைமிரட்டல் விடுத்தனர் என்றும் அதற்கு ஆதரவாக வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதன்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது. அதனால் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.